**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S. 94/2024**
**(Old OS 28/2022, PDM TVM)**
**Examination of - PW2**

| | | |
|---|---|---|
| **Name** | : | **கணேசன்** |
| **Husband Name** | : | **ராமானுஜம்** |
| **Village** | : | **கணியாம்பூண்டி** |
| **Age** | : | **45** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 12.02.2026**

**(குறுக்குவிசாரணை – 2, 3 பிரதிவாதிகளின் அரசு வழக்கறிஞர் ஆஜர். 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் ஆஜர்)**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி ருக்குமணி எனக்கு என்ன உறவு முறைய என்றால் அம்மா ஆவார். வாதி இந்த வழக்கை என்ன என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சொத்து எங்களுடையது என்று நீதிமன்றத்தை சொல்ல சொல்லி பரிகாரம் கேட்டுள்ளார்கள். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன், எழுத்து கூட்டி படித்துள்ளேன். சர்வே எண் 39/11, 39/10, 39/8 ஆகிய வழக்கு சொத்துக்களுக்கு தான் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்ள் அனைத்தும் ஆதியில் ரங்கசாமி நாயுடு என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ரங்கசாமி நாயுடுவிற்கு 1 சுந்தர ராஜீலு, கோவிந்தராஜீ, ராமனுஜம் ஆகிய 3 ஆண் நபர்கள் பிறந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ரங்கசாமி நாயுடுவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் மற்றும் மேற்படி 3 ஆண் பிள்ளைகளும் விட்டுவிட்டு எந்தவொரு ஏற்பாடு செய்யாமலும் 1972ம் வருடம் காலமாகிவிட்டார் என்றால் காலமாகி விட்டார் என்று தெரியும் ஆனால் 1972ல் இறந்தார் என்று எனக்கு தெரியாது.

மேற்படி 3 ஆண் பிள்ளைகளும் கடந்த 24.05.1974ம் தேதி வாசாஆ2 பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமாக பாகத்தை பிரித்துக்கொண்டார்கள்

என்றால் சரிதான். அந்த பாகத்தில் தாவா சொத்துக்கள் குறித்து ரங்கசாமி இரண்டாவது மகன் கோவிந்தராஜீக்கு மேற்படி பாகப்பத்திரத்தில் பி ஷெட்யூல் ஆக காட்டப்பட்டுள்ள சொத்துக்களில் இந்த தாவா சொத்துக்களும் அடங்கும் என்றால் சரிதான்.

சர்வே எண் 39/11, 39/10, 39/8 ஆகிய சொத்துக்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்து அருகே அருகே உள்ள நிலம் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்துக்களை பொறுத்து ரோட்டுக்கு மேற்கே, செல்லம்மாள் இடத்துக்கும் தெற்கே, தனபால் கிரய நிலத்திற்கும் கிழக்கே, ஏரி வாய்காலுக்கும் வடக்கே இதற்கு மத்தியில் தான் தாவா சொத்துக்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

கோவிந்தராஜீக்கு ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்தில் 15வது இனமான புல எண் 31/4 கோவிந்தராஜீக்கு பாகம்காட்டப்பட்டு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான் ஆனால் மேற்படி நிலம் ஏரிவாய்க்காலுக்கு தெற்கு உள்ளது. தாவா சொத்துக்கள் ஏரிவாய்காலுக்கு வடக்கே உள்ளது. புல எண் 31/4 ரங்கசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு அந்த சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியாது.

புல எண் 31/4 குறித்து எனது தாயார் தாக்கல் செய்துள்ள இந்த தாவாவில் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை எனது வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்தாரா என்றால் படித்து காண்பித்தார். புல எண் 31/4ற்கு ஜக்குபந்தி ரோட்டுக்கும் மேற்கே, செல்லம்மாள் நிலத்திற்கும் தெற்கு, தனபால் கிரய இடத்திற்கு கிழக்கு, ஏரிவாய்க்காலுக்கும் வடக்கு என்றும் அதன் விஸ்தீரணம் 0.40 செண்ட் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் மேற்படி 31/4 சொத்து என்பது ரோட்டிற்கு பக்கத்தில் வரவில்லை அது தனியாக நடு கழனியாக தனியாக உள்ளது.

என்னிடம் காட்டப்படும் பாகப்பத்திரமான வாசாஆ2ல் மேற்படி ஜக்பந்தியை காட்டி புல எண் 31/4 மற்றும் அதன் விஸ்தீரணம் 0.40 செண்ட் என்று தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஜக்பந்திகளுக்கு உட்பட்டு தான் தாவா சொத்துக்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான் ஆனால் புல எண் தவறாக போட்ப்பட்டுள்ளது. புல எண் 31/4ஐ பொறுத்தவரை ரங்கசமாமிக்கோ, அவரின் 3 மகன்களுக்கோ எந்தவகையிலும் பாத்தியப்படாத சொத்து என்றும், அதை பொறுத்து பாகப்பத்திரத்தில் குறிப்பிட்டும் அதற்கான ஜக்பந்தியான தாவா சொத்துக்கான ஜக்பந்தியை எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் தவறான சங்கதி என்றும் நான் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. புல எண் 31/4ஐ பொறுத்து ரங்கசமாமிக்கோ அல்லது அவரின் 3 மகனுக்கோ பாத்தியம் இல்லாது சொத்து என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதைப்பற்றி எனக்கு நன்கு தெரியும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி புல எண் 31/4 சொத்தை ரங்கசாமியும் அவரது மகனும் அனுபவித்தது இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்தை பொறுத்த வரை பி அட்டவணையில் 2, 5வது மற்றும் 8வது இனமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதில் ஜக்பந்தி எதும் குறிப்பிடவில்லை என்றாலும் புல எண் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளது என்றாலும் சரிதான்.

தாவா சொத்துக்கான ஜக்பந்தி அதாவாது ஏரிவாய்காலுக்கும் வடக்கு, செல்லம்மாள் இடத்திற்கும் தெற்கு, ரோட்டுக்கும் மேற்கு, அசோகன் கிரய நிலத்திற்கும் கிழக்கு இதன் மத்தியில் 0.40 செண்ட் இடத்தை கோவிந்தராஜீ ராமமூர்த்தி நாயுடு மனைவி ஜெயலட்மி என்பவருக்கு 27.03.1979ம் தேதியில் ஆவண எண் 237/1979 முன்னிலைக்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரயம் கொடுக்கும்போது மேற்படி ஜக்பந்திகளை சரியாக குறிப்பிட்டுவிட்டு புல எண்ணை பொறுத்து தவறுதலாக தாவா புல எண்கள்

ஆன 39/8, 39/10 மற்றும் 39/11 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 31/4 என்று தவறாக குறிப்பிட்டுவிட்டார் என்றால் சரியல்ல.

மேற்படி கிரயத்தை பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் மேற்படி தாவா சொத்தை ஜெயலட்சுமி சுவாதீனம் எடுத்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. கிரயம் பெற்று 18 ஆண்டுகள் ஜெயலட்சுமி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 01.09.1997ல் தாவா சொத்துக்களை பொறுத்த வரைக்கும் 1ம் பிரதிவாதி தமிழ்செல்வனுக்கு மேற்படி ஜெயலட்சுமி ஆவண எண் 671/1997 தேதியில கிரயம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரயம் கொடுக்கும்போது தவறான புல எண் 31/4ஐ குறிப்பிடாமல் சரியான புல எண் ஆன 39/8, 39/10 மற்றும் 39/11 என்று குறிப்பிட்டும் அதற்கான ஜக்பந்தியாக ரோட்டுக்கும் மேற்கே, செல்லம்மாள் நிலத்திற்கும் தெற்கு, தனபால் கிரய இடத்திற்கு கிழக்கு, ஏரிவாய்க்காலுக்கும் வடக்கு இதற்கு மத்தியில் 0.40 ஏக்கர் என்று சரியாக கிரயம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

தாவவை பொறுத்த வரைக்கும் 1ம் பிரதிவாதியிடம் இருந்து தாவா சொத்துக்களை சுவாதீனம் பெற வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வகையில் கிரயம் வாங்கிய 1ம் பிரதிவாதி தமிழ்செல்வன் 1997ல் இருந்து அனுபவித்து வந்துள்ளார் என்றால் சரிதான் அது குறித்து சுவாதீனம் பெற தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

1ம் பிரதிவாதி 1997ல் கிரயம் வாங்கி தாவா சொத்துக்களை பட்டா எண் 277 மாற்றியுள்ளார் என்றால் சரிதான். 1997ல் பட்டா கொடுக்கப்பட்டு அன்றில் இருந்து இன்று வரை அவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் தெரியாது. 1998ல் பட்டா கொடுக்கப்பட்டது தற்போது நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1997ல் இருந்து 1ம் பிரதிவாதி பெயரில் தான் மேற்படி தாவா சொத்துக்களுக்கு தீர்வை செலத்தி வருகிறார் என்றால் சரிதான், 1998 முன்பு வரை நாங்கள் தான் தீர்வை செலுத்தினோம் அந்த தீர்வை ஆவணங்கள் அனைத்தும் எங்களிடம் உள்ளது. மேற்படி நாங்கள் தீர்வை செலத்தியதாக சொல்லப்படும் ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் எனது தாயாரா, நானோ

தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி தீர்வை ரசீதுகள் எங்களிடம் உள்ளது தாக்கல் செய்யவுள்ளோம்.

பிரதிவாதி தனது எதிர்வழக்குரையோடு பட்டா எண் 277க்கு 2002, 2005, 2006, 1427ம் பசிலி உண்டான 2019 ஆண்டுகான தீர்வைகளை செலுத்தி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த வகையில் தாவா சொத்துக்களை பொறுத்த வரை திருவண்ணாமலை ஐசிஐசிஐ வங்கியில் வீடு கட்ட 29.05.2019 தேதியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றும் அந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்களை பொறுத்த வரையில் 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வகையில் தாவாவில் 10.12.2021ம் தேதியில் 1ம் பிரிதிவாதி சட்டத்திற்கு புறம்பாக நுழைந்துவிட்டார் என்று கூறுவதும் தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்த வரையில் 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றாலும் கடந்த 27 வருடங்களாக அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்